**06.06.2024 அ.வ.எண்.132/2003 மற்றும் அ.வ.எண்.11/2007**

**பி.வா.சா.2, பழனி த/பெ. பூங்காவனம்**

**குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்து கடம்பை கிராமத்தில் உள்ளது. நான் மழையூர் கிராமத்தில் வசிக்கிறேன். எனது ஊரிலிருந்து வழக்கு சொத்து 2 கி.மீ தொலைவிலுள்ளது. வழக்கு சொத்தின் அருகில் எனக்கு நிலம் ஏதும் இல்லை. எனக்கு மழையூர் கிராமத்திலும் கோதண்டபுரம் கிராமத்திலும் விவசாய நிலம் உள்ளது. எனக்கு 3 ஏக்கர் நிலம் உள்ளது. வழக்கு சொத்தின் விஸ்தீரணம் 1 ஏக்கர் 68 செண்ட் ஆகும். அதன் நான்கெல்லை விவரம் தெரியாது. வழக்கு சொத்து முழுவதும் ஒரே சதுரமாகதான் உள்ளது. வழக்கு சொத்தை பொருத்து கண்ண பிள்ளை நாராயணசாமி பிள்ளைக்கு கிரய ஒப்பந்தம் எழுதிக் கொடுத்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அது பற்றி கண்ண பிள்ளை என்னிடம் ஏதும் சொல்லவில்லை. கண்ண பிள்ளை எழுதிக்கொடுத்த கிரய ஒப்பந்தத்திற்கு அவரது மருமகன் பெருமாள் என்பவர் சாட்சி போட்டுள்ளார் என்றால் இருக்கலாம். கடம்பை கிராம தலைவர் முத்துசாமி என்பவரை எனக்கு தெரியும். கண்ண பிள்ளை எழுதிக்கொடுத்த கிரய ஒப்பந்தம் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றும் அவ்வாறு தெரிந்துதான் நானும், கண்ண பிள்ளையும் அ.வ.எண்.11/2007 வழக்கின் வாதியும் கூட்டு சதி செய்து கிரய பத்திரத்தை உருவாக்கினோம் என்பது சரியல்ல. நான் தரகராக இருந்து சுமார்30 நபர்களுக்கு கிரயம் பெற்று கொடுத்துள்ளேன். நான் நாராயணசாமி மற்றும் அவரது குடும்பத்தாரை அசிங்கமாக திட்டியதாக என் மீது காவல் நிலைய புகார் கொடுக்கப்பட்டது என்றால் அப்படி ஏதுமில்லை. கண்ண பிள்ளையும் நடராஜனும் சேர்ந்து இதே நீதிமன்றத்தில் ஒரு வழக்கை வழக்கு சொத்து பொருத்து தாக்கல் செய்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கு பற்றி நடராஜன் என்னிடம் சொல்லவில்லை. நான் நடராஜன் அழைத்ததால்தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்பது சரிதான். நடராஜன் ஒரு செண்ட் ரூ.300/- என்ற விலைக்கு கிரயம் வாங்கினார். அந்த பணத்தை நடராஜன் எங்கு வைத்திருந்தார் என கேட்டால் பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்தார் எங்கு வைத்திருந்தார் என்ற விவரமெல்லாம் எனக்கு தெரியாது. நடராஜனின் கிரயப்பத்திரத்திற்கு நான் மற்றும் வெள்ளை மற்றும் பாண்டியன் ஆகியோர் சாட்சி கையொப்பமிட்டோம். நடராஜனின் கிரய ஆவணம் பணமே கொடுக்காமல் பொய்யாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்பது சரியல்ல. நடராஜன் பால் வியாபாரம் செய்தார். கடந்த 2 வருடமாக அவர் பால் வியாபாரம் செய்யவில்லை. நடராஜனுக்கு ஏற்கனவே வேறு நிலம் இருந்தது அதனை அவர் தனது தம்பிக்கு கொடுத்துவிட்டதாக கேள்விபட்டேன். வழக்கு சொத்தை நேரில் பார்த்துள்ளேன். வழக்கு சொத்திற்கு அருகில் நாராயணசாமிக்கு 7 ஏக்கர் நிலமுள்ளது என்றால் அது விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் நாராயணசாமி 1990 -லிருந்து 2007 -வரை தனது இதர நிலத்தில் இருந்து நீர் பாசனம் செய்து விவசாயம் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2007-ற்கு பிறகு வழக்கு சொத்து பயிரிடபடாமல் உள்ளது என்றால் அவ்வாறு உள்ளதாக தான் சொன்னார்கள். நான் சென்று பார்க்கவில்லை.

நானும், நடராஜனும் தடை செய்ததால்தான் வழக்கு சொத்து பயிரிடபடாமல் உள்ளது என்றால் அது சரியல்ல. நடராஜன் அரசியல் கட்சியில் கிளை செயலாளராக உள்ளார் என்பது சரிதான். கண்ணபிள்ளை எழுதிக்கொடுத்த கிரய ஒப்பந்தம் பற்றி தெரிந்தே நடராஜன் கிரயம் பெற்றார் என்றும் அதற்கு நான் உடந்தையாக இருந்தேன் என்றும் சொன்னால் அது சரியல்ல. கண்ண பிள்ளை இருந்தவரை அவருடன் எனக்கு விரோதம் ஏதுமில்லை.